**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், பி.ஏ., பி.எல்.,**
**செயலாளர், தென்காசி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு)**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாள் புதன்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 04–ஆம் நாள்)**

**<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.272/2021</u>**
(CNR.No.TNTS04-000190-2021)

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், இலத்தூர் கிராமம், சீவநல்லூர், வடக்கு பிள்ளையார் கோவில் தெரு, கதவு எண்.5/1/21 நிர் வீட்டில் வசித்துவரும் இசக்கி குமாரர், விபத்திற்கு முன்பு ஜவுளி கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வந்த, இந்து, 28 வயதுள்ள இ. பேச்சிமுத்து

. . . மனுதாரர்

/எதிர்/

1. Soman, Son of Prabhakaran, aged about 35 years and residing at Thekkoott House, Pazhuvil West, Thrissur, Kerala State (Driver of KL-33-M-2598 Ashok Leyland Lorry)

2. T.M. Shiyas, Thuruthel Trade Links Proprietor, XIX/682, Mooparuveettil Buildings, APJ Kalam Road, Changanacherry, Kottayam, Kerala State – 686101 (Owner of KL-33-M-2598 Ashok Leyland Lorry)

3. The Oriental Insurance Company Limited, through its Divisional Officer, its having office at Jyothi Super Bazar, 1st Floor, Thodupuzha, Kerala State – 685584 (Insurer of KL-33-M-2598)

. . . எதிர்மனுதாரர்கள்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:20:52 +0530

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 06.10.2020 |
| மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 15.10.2020 |
| மனு உத்தரவு நாள் | : | 18.03.2026 |

இந்த மனுவானது, 18.02.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.P. குமார் அவர்களும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சங்கரசுப்பிரமணியன் அவர்களும் முன்னிலையாகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதார்களைப் பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டுள்ள நிலையிலும், இரு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வாதுரைகளைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்வளிப்பு**

இந்த மனுவானது, மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166–ன் கீழ் இழப்பீடாக எதிர்மனுதார்களிடமிருந்து ரூ.5,00,000/– கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

2.1 கடந்த 04.08.2020ம் தேதியன்று இரவு 08.20 மணியளவில், TN–76–L–7549 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில், மனுதார், செங்கோட்டை–ஈனா விலக்கு செல்லும் சாலையில் உள்ள இலத்தூர் சிமெண்ட் குடோன் முன்பு, மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசை நோக்கி மெதுவாகவும், கவனமாகவும், சாலைவிதிகளை கடைபிடித்தும் ஓட்டி வந்துகொண்டிருந்தபோது, மேற்படி சாலையில், மேற்படி திசையில், மேற்படி இரு சக்கர வாகனத்திற்கு முன்பாக, 2 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட KL33 M 2598 என்ற லாரியினை, அதன் ஓட்டுநரான 1 ஆம் எதிர்மனுதார், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, எவ்வித சைகையோ, சமிக்கையோ செய்யாமல், திடீரென நடுரோட்டில் நிறுத்திவிட்டதால் மனுதார்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:08 +0530

ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மேற்படி லாரியின் பின்புறம் இடித்து விபத்து ஏற்பட்டுவிட்டது. மேற்படி விபத்தில் மனுதாருக்கு இடதுபக்கம் தோள்பட்டையில் எலும்பு முறிவு கொடுங்காயமும், இடது பக்கம் தோள்பட்டையில் காயமும், வலது கால் முட்டியில் கொடுங்காயமும் மற்றும் உடல் முழுவதும் ஊமைக்காயங்களும், இரத்தக்காயங்களும், சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே தன் சுயநினைவை இழந்து விட்டார்.

2.2 உடனடியாக மனுதாரரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு மனுதாரருக்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டார். மேற்படி விபத்திற்கும், மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கும் முழுக்காரணம் 1ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவான மற்றும் அதிவேகமான அஜாக்கிரதையான வாகன ஓட்டுதலே காரணம் ஆகும். மேற்படி விபத்திற்கு இந்த மனுதாரர் எந்தவிதத்திலும் பொறுப்பல்ல. தகவலின்பேரில் 1ஆம் எதிர்மனுதார் மீது இலத்தூர் காவல்நிலையத்தில் குற்ற எண்.132/2020–ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மேற்படி வழக்கானது செங்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. மனுதார், தென்காசியில் உள்ள ஒரு ஜவுளி கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வந்தும், வீட்டில் வைத்து துணி வியாபாரம் செய்தும் மாதம் ரூ.18,000/–க்கு மேல் சம்பாதித்து வந்தார். விபத்திற்கு பின்பு மனுதாரால் முன்புபோல் எவ்வித வேலையும் செய்ய இயலவில்லை. 2ஆம் எதிர்மனுதாரின் வாகனமானது இந்த 3ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரருக்கு எதிர்மனுதார்கள் இழப்பீடாக ரூ.5,00,000/– கொடுக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>3ஆம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரரின் மனு உண்மையல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. மனுதார் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரில், நின்றுகொண்டிருந்த லாரியின் மீது மோதிவிட்டதாகவே புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:15 +0530

இதிலிருந்தே மனுதார்தான் அவரது வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டிவந்து, நின்றுகொண்டிருந்த லாரியின் மீது மோதியுள்ளார் என்பது தெளிவாகிறது. மேலும், மருத்துவர், மனுதாருக்கு அளித்த விபத்து பதிவேட்டில், மனுதார் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்ததாகக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். எனவே, மது போதையில்தான் மனுதார் அவரது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, நின்றுகொண்டிருந்த லாரியின் பின்புறமாக வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, விபத்திற்கு மனுதார்தான் காரணமாவார். எனவே, இந்த எதிர்மனுதார் மனுதாருக்கான இழப்பீட்டு தொகையை வழங்கக் கடமைப்பட்டவரில்லை. காவல்துறையினர் தயார் செய்த மாதிரிவரைபடத்திலும், விபத்தானது சாலையின் இடது ஓரமாக நடந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து, மனுதார்தான் விபத்திற்கு காரணம் என்பது புலனாகும். மனுதாருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் எதுவும் இல்லை. மனுதாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் குணமடைந்துவிட்டன. மனுதாரின் வயது, வருமானம், தொழில் மற்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் அதற்கு அவர் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சைகள் ஆகியவைகளை மனுதாரே தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், அதற்கு கேட்டுள்ள வட்டி விகிதமும் அபரிமிதமானவை. மற்றபடி மனுதார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும். அவை அனைத்தும் இந்த எதிர்மனுதாரால் மறுக்கப்படுகின்றன எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. மனுதாரின் மனுவுரை, 3 ஆம் எதிர்மனுதாரின் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினைகள்</u>**

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:20 +0530

2. இம்மனுவில் மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3. அவ்வாறு கிடைக்கத்தக்கது எனில் எந்த எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை வழங்க கடமைப்பட்டவர்?

4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் பேச்சிமுத்து ம.சா.1 ஆகவும், மகேஸ்கண்ணன் என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதார் தரப்பில், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில், வைரமுத்து என்பவர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, இந்த விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டது என்றும், விபத்தின்போது மனுதார் மது அருந்தியிருந்ததாகக் கூறுவது தவறானது என்றும், 1 ஆம் எதிர்மனுதார் ஓட்டிய வாகனம் 2 ஆம் எதிர்மனுதாருக்குச் சொந்தமானது என்றும், விபத்தின்போது மேற்படி வாகனம் 3 ஆம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதென்றும், மனுதாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, மனுதார் கோரியபடி மனுதாருக்கு இழப்பீட்டு தொகை வழங்கலாம் என வாதிட்டார்.

7. கற்றறிந்த 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, இந்த மனுவைப் பொறுத்து, மனுதாரின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையினாலும்தான் விபத்து நடந்துள்ளது என்றும், விபத்தின்போது மனுதார் மதுவின் ஆளுகையில் அவர் ஓட்டிவந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்து, சாலையின் ஓரமாக நின்றுகொண்டிருந்த வாகனத்தின்மீது அவராகவே வந்து மோதி

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:30 +0530

விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும், விபத்திற்கு மனுதாரே காரணம் என்பதால், இம்மனுவை 3 ஆம் எதிர்மனுதாரைப் பொறுத்து தள்ளுபடி செய்யலாம் என வாதிட்டார்.

8. **<u>பிரச்சனை எண் 1–க்கான தீர்வு</u>**

இந்த மனுவைப் பொறுத்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என பரிசீலனை செய்யும்போது, இம்மனுவின் மனுதார் பேச்சிமுத்து ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 04.08.2020 ம் தேதியன்று இரவு 08.20 மணியளவில், தான் TN–76–L–7549 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில், செங்கோட்டை–ஈனா விலக்கு செல்லும் சாலையில் உள்ள இலத்தூர் சிமெண்ட் குடோன் முன்பு, மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசை நோக்கி மெதுவாகவும், கவனமாகவும், சாலைவிதிகளை கடைபிடித்தும் ஓட்டி வந்துகொண்டிருந்தபோது, மேற்படி சாலையில், மேற்படி திசையில், மேற்படி இரு சக்கர வாகனத்திற்கு முன்பாக, 2 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட KL 33 M 2598 என்ற லாரியினை, அதன் ஓட்டுநரான 1 ஆம் எதிர்மனுதார், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, எவ்வித சைகையோ, சமிக்கையோ செய்யாமல், திடீரென நடுரோட்டில் நிறுத்திவிட்டதால் தான் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மேற்படி லாரியின் பின்புறம் இடித்து விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், அதில் தனக்கு இடதுபக்கம் தோள்பட்டையில் எலும்பு முறிவு கொடுங்காயமும், இடது பக்கம் தோள்பட்டையில் காயமும், வலது கால் முட்டியில் கொடுங்காயமும் மற்றும் உடல் முழுவதும் ஊமைக்காயங்களும், இரத்தக்காயங்களும், சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே தன் சுயநினைவை இழந்து விட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், மனுதார் தனது சாட்சியத்தில், உடனடியாக தன்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டதாகவும், விபத்திற்கும், தனக்கு ஏற்பட்ட கொடுங்காயத்திற்கும் முழுக்காரணம் 1 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவான மற்றும் அதிவேகமான அஜாக்கிரதையான வாகன ஓட்டுதலே காரணம் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், இதுகுறித்து 3 ஆம் எதிர்மனுதார் தரப்பில், மனுதாரை குறுக்கு விசாரணை செய்தபோது, நிறுத்திவைக்கப்பட்டிருந்த லாரியின்

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.18 18:21:36 +0530

பின்புறமாக வந்து மனுதார் மோதியதாக கேள்வி எழுப்பியபோது, மனுதார், அதை மறுத்து, முன்னால் சென்றுகொண்டிருந்த லாரி திடீரென நிறுத்தப்பட்டதால்தான் விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

9. மேலும், விபத்தினை நேரடியாக பார்த்ததாக மனுதார் தரப்பில் சுட்டிக்காட்டப்படும் மகேஸ்கண்ணன் என்பவர் மனுதார் தரப்பில் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், மனுதார் ஓட்டிச்சென்ற இரு சக்கர வாகனத்திற்கு முன்பாக, 2 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட KL33 M 2598 என்ற லாரியினை, அதன் ஓட்டுநரான 1 ஆம் எதிர்மனுதார், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து, எவ்வித சைகையோ, சமிக்கையோ செய்யாமல், திடீரென நடுரோட்டில் நிறுத்திவிட்டதால் மனுதார் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மேற்படி லாரியின் பின்புறம் இடித்து விபத்து ஏற்பட்டுவிட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

10. இவ்வாறு இந்த விபத்து சம்பந்தமாக மனுதார் கொடுத்த புகாரின் அடிப்படையில், இலத்துார் காவல்நிலையத்தில் குற்ற எண்.132/2020-ல் கடந்த 04.08.2020 ம் தேதியில் இ.த.ச., 279 மற்றும் 337 பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுவின் மனுதார் ம.சா.1 சாட்சியமளித்துள்ளவாறு, இந்த விபத்தானது 1 ஆம் எதிர்மனுதார் சோமன் என்பவரின் கவனக்குறைவினால் ஏற்பட்டதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், விபத்தில் மனுதார் காயமடைந்த நிலையில், இதுசம்பந்தமாக மனுதாருக்கு கொடுக்கப்பட்ட விபத்து பதிவேடு ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக மனுதார், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:44 +0530

11. இவ்வாறு குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? எனப் பரிசீலனை செய்யும்போது, மனுதார் தரப்பின்படி, இந்த விபத்தானது, 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பொறுத்து, ஏற்கனவே ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவில் 1, 2 எதிர்மனுதார்கள் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள். மேலும், 3ஆம் எதிர்மனுதார் தரப்பின்படி, மனுதார் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்ததாகவும், அதனால் இந்த விபத்து மனுதாரின் கவனக்குறைவால் ஏற்பட்டிருக்கலாம் என வாதிட்டாலும், மனுதார் மது அருந்தியிருந்ததாக ம.சா.ஆ.2 விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதன்பின்னர் மனுதாரின் ரத்த மாதிரியை எடுத்து பரிசோதித்து, அதில் மதுவின் அளவு எவ்வளவு இருந்தது? என்பது குறித்தோ அல்லது மனுதார் விபத்து சமயத்தில் மது அருந்தியிருந்தாரா? என்பதற்கு வேறு ஏதேனும் பரிசோதனையோ எதுவும் செய்யப்படவில்லை. மேலும், அவ்வாறு மது அளவுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, விபத்து சமயத்தில் மனுதார், அவர் அருந்தியிருந்த மதுவின் ஆளுகையில் இருந்ததால்தான், விபத்து ஏற்படக் காரணமாக இருந்தார் என எடுத்துரைக்கப்படவேண்டுமென கீழ்க்கண்ட முன்வழித் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, ***Manikandan -vs- P.Palani and others decided by Hon'ble High court of Madras in C.M.A.No. 470 of 2018 dated 12.03.2020 as follows,***

> *"13. Based on Ex.P.2/discharge summary, the Tribunal found that the claimant was under the influence of alcohol at the time of accident and as per Ex.R4/copy of Accident Register, Ex.P.2/discharge summary & Ex.P.3/out patient record, the Tribunal fixed 50% contributory negligence on the claimant.*
>
> *14. Whether discharge summary, out patient records and accident register are enough to prove that the appellant was under the influence of alcohol is a question to be delved into. Section 185 of the Motor Vehicles Act, 1988 speaks about drunken driving, which is extracted as follows:*

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:51 +0530

*"185. Driving by a drunken person or by a person under the influence of drugs. – Whoever, while driving, or attempting to drive, a motor vehicle -*
*(a) has, in his blood, alcohol exceeding 30 mg. Per 100 ml. of blood detected in a test by a breath analyser, or*
*(b) is under the influence of a drug to such an extent as to be incapable of exercising proper control over the vehicle.*

*shall be punishable for the first offence with imprisonment for a term which may extend to six months, or with fine which may extend to ten thousand rupees, or with both; and for a second or subsequent offence, if committed within three years of the commission of the previous similar offence, with imprisonment for a term which may extend to two year, or with fine which may extend to three thousand rupees, or with both.*

*If there is a suspicion that a person is under the influence of alcohol or he was smelling alcohol at the time of accident, the accused drunken driver has to be sent compulsorily to hospital where blood samples have to be taken to detect the contents of the alcohol to verify as to whether the contents of alcohol exceed 30 mg per 100 ml or not or test by breathalyser compulsorily so that the prosecution could succeed in the case filed against the drivers for drunken driving u/s 185 of the Motor Vehicles Act, 1988, apart from u/s.184 for dangerous driving and under Section 279 of IPC.*

*15. Though Ex.P.2/discharge summary speaks about smelling of alcohol and there is evidence of RW2/Doctor, those evidences are not enough to comply with the requirement under Section 185 of Motor Vehicles Act, 1988."*

மேற்சொன்ன முன்தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, எவ்வித பரிசோதனையும் மனுதாருக்கு செய்யப்படாத நிலையில், 3 ஆம் எதிர்மனுதார் தரப்பில் கூறப்பட்டுள்ளவாறு, விபத்தின்போது மனுதார் மதுவின் ஆளுகையில் இருந்ததால், விபத்தானது மனுதாரின் கவனக்குறைவினால்தான் ஏற்பட்டது என எடுத்துரைக்கப்படாத நிலையில், விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினால்தான் ஏற்பட்டுள்ளது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவைப் பொறுத்து, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவு மற்றும்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:21:57 +0530

அஜாக்கிரதையினால் மட்டுமே விபத்து ஏற்பட்டதாக முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.1–ஐப் பொறுத்து இவ்வாறாக முடிவு செய்யப்படுகிறது.

12. **<u>பிரச்சினை எண்.2–க்கான தீர்வு</u>**

இம்மனுவில் மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? என பார்க்கும்போது, இந்த விபத்தினால் மனுதாருக்கு இடதுபக்கம் தோள்பட்டையில் எலும்பு முறிவு கொடுங்காயமும், இடது பக்கம் தோள்பட்டையில் காயமும், வலது கால் முட்டியில் கொடுங்காயமும் மற்றும் உடல் முழுவதும் ஊமைக்காயங்களும், இரத்தக்காயங்களும், சிராய்ப்புக் காயங்களும் ஏற்பட்டதாகக் கூறி ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.5 ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு கடந்த 04.08.2020 தேதியில் விபத்து ஏற்பட்டுள்ளதால், அதில் மனுதாருக்கு கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக ஆவணங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.2–ஐப் பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

13. **<u>பிரச்சினை எண்.3–க்கான தீர்வு</u>**

இந்த மனுவைப் பொறுத்து, எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தொகையை வழங்க கடமைப்பட்டவர்? எனப் பார்க்கும்போது, இந்த மனுவில் பிரச்சினை எண்.1–ஐ பொறுத்து, வழக்கு விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால் ஏற்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த 1ஆம் எதிர்மனுதார் ஓட்டிய வாகனம், 2ஆம் எதிர்மனுதாருக்கு சொந்தமானது என்பதும், மேலும், மேற்படி KL 33 M 2598 என்ற பதிவெண் கொண்ட வாகனமானது விபத்து சமயத்தில் 3ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு, ம.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.1 காப்பீட்டு சான்றிதழ்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 2ஆம் எதிர்மனுதாருக்குரிய வாகனத்தின் காப்பீடானது 11.12.2019 முதல் 10.12.2020 வரை அமலில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து, 3ஆம் எதிர்மனுதார் தரப்பில்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:03 +0530

எதிருரையில் மறுத்துள்ளபோதிலும், 2 ஆம் எதிர்மனுதாரின் வாகனமானது தங்களது காப்பீடு நிறுவனத்தில், விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பது குறித்து எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு காப்பீடு குறித்து, தகுந்த சாட்சிய, சான்றாவணங்களை 3 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாத நிலையில், விபத்து தேதியான 04.08.2020 அன்று, வழக்கு விபத்தானது, 2 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட KL 33 M 2598 என்ற வாகனத்தினை ஓட்டிவந்த 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகத்தினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வாகனத்தின் உரிமையாளரான 2 ஆம் எதிர்மனுதார், தன் வாகனத்தினை 3 ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள நிலையில், பகரப்பொறுப்பின் அடிப்படையில் மனுதாருக்குரிய இழப்பீட்டினை காப்பீட்டாளரான 3 ஆம் எதிர்மனுதாரே வழங்கக் கடமைப்பட்டவர் என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.3-ஐப் பொறுத்து இவ்வாறாக முடிவு செய்யப்படுகிறது.

14. <u>பிரச்சினை எண்.4-க்கான தீர்வு</u>

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 28 வயது என்றும், அவர் தென்காசியில் உள்ள ஒரு ஜவுளி கடையில் வேலை பார்த்தும், வீட்டில் வைத்து துணி வியாபாரம் செய்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/- வருமானம் பெற்று வந்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், விபத்தானது கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2020 ஆம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்றுமுள்ள காரணிகளின் அடிப்படையிலும், மனுதாருக்கு ரூ.12,000/- மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டு, மனுதார் மூன்று மாத காலங்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:09 +0530

ஒரு மாதத்திற்கு ரூ.12,000/− வீதம், மூன்று மாதங்களுக்கான வருமான இழப்பாக, மொத்தம் 3 x ரூ.12,000/− = ரூ.36,000/−கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

15. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், இதுசம்பந்தமாக மனுதாருக்கு ஏற்பட்ட பாதிப்பை கண்டறிய மாவட்ட மருத்துவக் குழுமத்திற்கு மனுதாரை அனுப்பிவைக்க இவ்வாயத்தால் உத்தரவிடப்பட்டும், மனுதார், மாவட்ட மருத்துவக் குழுமத்தின் முன்பு ஆஜராகவில்லை. எனவே, மேற்படி மாவட்ட மருத்துவ குழுமம், மனுதாரை பரிசீலனை செய்து, அவருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர ஊனத்திற்கு மனுதாரை ஆய்வு செய்து, அவருக்கு நிரந்தர ஊனமோ, பகுதி நிரந்தர ஊனமோ ஏற்பட்டது குறித்து தெளிவுபடுத்த மனுதார் வாய்ப்பளிக்கவில்லை. ஆக மனுதாருக்கான ஊனத்தை மனுதார் தரப்பில் நிர்ணயம் செய்து எடுத்துரைக்காத நிலையில், மனுதாருக்கு மேற்படி காயங்களினால் நிரந்தர ஊனமோ, பகுதி நிரந்தர ஊனமோ ஏற்பட்டதாக மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை என இவ்வாயம் முடிவு செய்கிறது.

16. மேலும், மனுதார் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை மேற்கொண்டிருந்த நிலையில், அதன்பின் வெளிநோயாளியாகவும் சிகிச்சை மேற்கொண்ட நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மையை கருத்திற்கொண்டும், அவர் மேற்கொண்ட சிகிச்சையை கருத்திற்கொண்டும் மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.25,000/− கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

17. மேலும், மனுதார் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டபோது, செலவீனங்கள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டு, அதுசம்பந்தமான ஆவணங்கள் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ரசீதின்படி ரூ.500/−மருத்துவ செலவீனங்களுக்காக மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.10,000/−

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.18 18:22:15 +0530

கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டு, அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது அணிந்திருந்த ஆடை இழப்பிற்காக ரூ.1,000/-மும், மனுதாரருக்கு மருத்துவமனையில் உதவியாக இருந்த நபரைப் பொறுத்து ஒரு நாளைக்கு ரூ.400/- வீதம் 15 நாட்களுக்கு 15 x 400 = 6,000/- Attendant Charges என்ற முறையில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | வருமான இழப்புக்காக | ரூ.36,000/- |
| 2. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.25,000/- |
| 3. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.10,000/- |
| 4. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.10,000/- |
| 5. | ஆடை, அணிகல்ன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |
| 6. | Attendant Charges-க்காக | ரூ.6,000/- |
| 7. | மருத்துவ செலவீனங்களுக்காக | ரூ.500/- |
| | **மொத்தம்** | **ரூ.88,500/-** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.4-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

18. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.88,500/-ஐ 3 ஆம் எதிர்மனுதார், மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:24 +0530

எண்.6456273001-ல் IFSC Code No - IDIB000T009 க்கு இ-மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.372.50/-ல், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/-ஐ கழித்து போக உள்ள தொகை ரூ.352.50/-ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் மனுதார் செலுத்தவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.5,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரின் வருகையின்மைக்காக இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ஆம் தேதியன்று திறந்த தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:30 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி (மு.கூ.பொ.)**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

ம.சா.1 திரு. பேச்சிமுத்து (மனுதார்)

ம.சா.2 திரு. மகேஸ்கண்ணன்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:42 +0530

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 04.08.2020 | முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | 04.08.2020 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.3 | – | காப்பீட்டு சான்றிதழின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | – | நுண்கதிர்படங்கள் |
| ம.சா.ஆ.5 | 05.08.2020 | ஸ்கேன் அறிக்கை மற்றும் மருத்துவ விடுவிப்பு அறிக்கை |
| ம.சா.ஆ.6 | 05.08.2020 | மருத்துவ ரசீது |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

எ.சா.1 திரு. வைரமுத்து

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| எ.சா.ஆ.1 | – | காப்பீட்டு சான்றிதழின் ஒளிநகல் |

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>** இல்லை

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.18 18:22:51 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி (மு.கூ.பொ.)**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**இயக்க ஊர்தி விபத்து கோருரிமை அசல் மனு எண்.272/2021**

**தீர்வளிப்பு (அசல்/வரைவு)**

**நாள் 18.03.2026**